செய்தி வெளியீடு எண்:135 நாள்:17.02.2021

## செய்தி வெளியீடு

தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர்களின் சிறப்பைப் போற்றும் வகையில் அவரின் 167ஆவது பிறந்த நாளான 2021 பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளன்று அவரின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மலர்த் தூவிப் போற்றுதல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. உ.வே. சாமிநாதையர் அவர்கள், அரிய பல தமிழ்ச் சுவடிகளைத் திரட்டியும் தொகுத்தும் தமிழுலகிற்குத் தந்து அருந்தமிழ்த் தொண்டாற்றியவர். இவர் மட்டும் இப்பணியைச் செய்யாமல் போயிருந்தால் எத்தனையோ அரிய தமிழ்ச் சுவடிகள் கரையானுக்கு இரையாகியிருக்கும், காலப்போக்கில் மறைந்து போயிருக்கும் செம்மொழித் தமிழின் கருவூலங்கள் ஓலைச் சுவடிப் புதையலிலிருந்து அச்சு வடிவில் பாதுகாப்புப் பெற உழைத்தவர். தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை ஆகிய சங்க நூல்களுள் பலவற்றையும், தமிழ் விடுதூது போன்ற வேறு பல அரிய தமிழ் நூல்களையும் அச்சு வடிவில் பல தலைமுறை காண உதவியவர்.

இவ்வாறு தமிழ்ச் சுவடிகளைத் தேடிச் சேகரித்துப் பிழைகளைத் திருத்தி, உரைக் குறிப்பு அளித்து, அச்சிட்டு, நூல்களாகக் கொணர்ந்து தமிழுக்கு வளம் சேர்த்த இத்தமிழ்ச் சான்றோரின் பணி தமிழ் உலகில் என்றென்றும் நிலைத்து நிற்பதாகும். மேலும் இவரின் நினைவைப் போற்றும் வகையில் திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம் அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் 2021 பிப்ரவரி 19 ஆம் நாள் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் 167ஆவது பிறந்த நாளாகும். இந்நாளில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்த் தாத்தா உ.வே.சா.அவர்களின் திருவுருவச் சிலைக்குக் காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மலர்த் தூவிப் போற்றுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், தமிழறிஞர்களும், அரசு அலுவலர்களும், பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9